DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 99/2023
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for
எதிரி ஆஜர்

பெயர் கண்ணதாசன்
தகப்பனார் பெயர் தனசேகர்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.05.2024
குறுக்கு விசாரணை

1. எதிரி எந்த தேதியில் எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் 10-01-2023 ம் தேதி கொடுத்தார். எந்த தேதியில் நான் வங்கியில் செலுத்தினேன் என்றால் 11.04-2023 ம் தேதி செலுத்தினேன். 10-01-2023 ம் தேதி காசோலை வழங்கப்பட்டதாக எனது முதன்மை வாக்குமூலத்திலும் எனது புகாரிலும் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியிருக்கிறேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன். மற்ற இரண்டிலும் விவரம் சொல்லவில்லை. எனது தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பில் 10-01-2023 ம் தேதி காசோலை வழங்கியதாக கூறியிருப்பது தவறு என்றாலும் எதிரி ஒருபோதும் எனக்கு காசோலை வழங்கவில்லை என்றாலும் சரியல்ல.

2. நான் 8 வருடங்களாக வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். எனது வரவு செலவு கணக்கு வருமான வரி கணக்கில் விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். என்னுடைய வரவு செலவு கணக்கு விவரங்கள் நான் தான் எழுதிவைப்பேன். வரவு செலவு விவரங்களை கேஷ் புக் என்ற பதிவேட்டில் நான் எழுதிவைத்திருக்கிறேன் என்றால் தேவை என்றால் எழுதி வைத்திருப்பேன். இல்லை என்றால் எழுதுவதில்லை. தினமும் வரவு செலவு விவரங்களை வருமான வரி சட்டத்தின்படி கேஷ் புக் பதிவேட்டில் எழுதவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும்.

3. வருமான வரி சட்டம் பிரிவு 269 ss பிரிவின் படி பணமாக ரூபாய் 20 ஆயிரத்திற்கு மேல் கொடுக்க கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ரூபாய் 90 லட்சத்தை எந்த தேதியில் எதிரிக்கு கொடுத்தேன் என்றால் 10-01-2023 ம் தேதி கொடுத்தேன். அவரிடமிருந்து சுவாதீனம் பெற்ற எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். ரொக்க பணமாக கொடுத்தேன். 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். நானும் எதிரியும் மட்டும் தான் இருந்தோம். என்ன காரணத்திற்காக பணத்தை கொடுத்தேன் என்றால் எதிரி மாடு மற்றும் கோழிப்பண்ணை வைத்திருந்தார் அதனை விரிவுபடுத்துவதற்காக வாங்கினார். எதிரிக்கு வட்டிக்காக தான் பணம் கொடுத்தேன். ரூபாய் 1.5 பைசா வட்டிக்காக கொடுத்தேன்.

4.பணம் கொடுத்ததற்கு கடன் பத்திரம் அல்லது கடனுறுதி சீட்டு எழுதி வாங்கினேன் என்றால் காசோலை மட்டும் வாங்கினேன். ரூபாய் 1.5 பைசா வட்டிக்கு கடன் கொடுத்ததற்காக வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் முதன்மை வாக்குமூலத்திலும் விவரம் கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் எதிரி ரூபாய் 90 லட்சம் கடன் வாங்கவில்லை என்றாலும் ரூபாய் 90 லட்சம் கடனாக கொடுக்க எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கறிஞர்

அறிவிப்பில் 10-01-2023 ம் தேதி ரூபாய் 90 லட்சம் பணம் கொடுத்ததாகவும் அவரிடம் பலமுறை பணத்தை கேட்டபிறகு 11-04-2023 ம் தேதி காசோலை கொடுத்ததாக கூறியிருக்கும் விவரம் தவறான என்றால் காசோலையை 10-01-2023 ல் கொடுத்துவிட்டார்.

5.முன்தேதியிட்டு 11-04-2023 தேதி என்று குறிப்பிட்டு பணம் கொடுத்த அன்றே காசோலையை வாங்கிவிட்டேன். 11-04-2023 ம் தேதி காசோலை வழங்கியதாக புகாரில் சொல்லியிருக்கும் விவரம் தவறா என்றால் அது தவறு தான். தவறான சங்கதிகளை குறிப்பிட்டு இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 2022 ம் ஆண்டு நவம்பர் அல்லது டிசம்பர் மாதம் கேட்டார். மூன்று மாதம் காலத்தில்குள் பணத்தை திரும்ப பெறுவதற்காக கடனாக வட்டிக்கு வழங்கப்பட்டுள்ளதால் வட்டி தொகையையும் சேர்த்து தான் காசோலையில் தொகையை பூர்த்தி செய்திருப்பேன் என்றாலும் ஆனால் வழக்கு காசோலை கடன்தொகை மட்டும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. உண்மையில் நான் பணம் கொடுத்திருந்தால் வட்டி தொகையையும் காசோலையில் பூர்த்தி செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த எதிரி இதே நீதிமன்றத்தில் சிசி 79/2023 என்ற வழக்கை ரூபாய் 1 லட்சம் ரூபாயிக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 31-01-2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட 1 லட்ச ரூபாயிக்கான காசோலை போதிய பணமில்லை என்று திரும்பிய விவரம் தெரிந்துக்கொண்டே வழக்கு பதிவு செய்ய எதிரியை பழிவாங்க வேண்டி இந்த வழக்கின் 90 லட்சம் ரூபாயிக்கான காசோலையை எதிரியை கேட்காமல் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் எதிரி கொடுக்கும் போதுபூர்த்திசெய்திருந்தது யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. காசோலையில் என் முன்னிலையில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை ஏற்கனவே கையொப்பம் செய்திருந்தது.

7. வழக்கு காசோலையில் கையொப்பம் வேறு மையிலும் மற்ற விவரங்கள் வேறு மையினாலும் பூர்த்தி செயப்பட்டுள்ளது என்றால் இல்லை ஒரே மையினால் தான் உள்ளது. வழக்கு காசோலையில் Account Payee என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையில் ஆக்ஸிஸ் வங்கி முத்திரை இரண்டு முறை போடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வழக்கிற்காக தெரியவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் கண்ணதாசன் என்ற பெயரில் D ரொம்ப தூரமாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையின் பின் பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்திற்கு கீழே 11-03-2023 என்று தேதி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. உண்மையில் 11-04-2023 ம் தேதி நான் காசோலையை வங்கியில் செலுத்தியிருந்தால் 11-03-2023 அன்று தேதி போட அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் பின் பக்கத்தில் Name Mismatch confirmed என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11-03-2023 ம் தேதி வழக்கு காசோலை வங்கியில் செலுத்தப்பட்டு திருப்பப்பட்டது என்றால் இல்லை. வழக்கு காசோலையில் 11-01-2023 என்ற காசோலையை 11-04-2023 என்று திருத்தம் செய்து மறுபடியும் பெயரை மாற்றம் செய்து மீண்டும் வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. வழக்கிற்காக நான் மாற்றமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. வழக்கு காசோலையை வங்கியில் செலுத்துவதற்கான செல்லானை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் வழக்கில் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை. அந்த செல்லானை தாக்கல் செய்தால் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பை தாம்பரம் முகவரிக்கு அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு எண் 79/2023 என்ற வழக்கில் தாம்பரம் முகவரிக்கு 14-02-2023 தேதியில் அனுப்பப்பட்ட அறிவிப்பில் அது போன்ற நபர் அந்த முகவரியில் இல்லை என்று திரும்பிய விவரம் எனக்கு தெரியும்.

10. இந்த வழக்கிற்காக அறிவிப்பை எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 24-04-2023 ம் தேதி அனுப்பினேன். இந்த வழக்கிற்காக ஒரு அறிவிப்பை மட்டும் தான் அனுப்பினேன். தாம்பரம் முகவரிக்கு தான் அறிவிப்பை அனுப்பினேன். இந்த வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொண்டார். எந்த தேதியில் பெற்றுக்கொண்டார் என்றால் 06-05-2023 ம் தேதி பெற்றுக்கொண்டார். எந்த முகவரியில் பெற்றுக்கொண்டார் என்றால் அது தெரியவில்லை. நான் எதிரி பெற்றுக்கொள்ளாத அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பு.த.சா.ஆ 4 சித்தாமூர் முகவரிக்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான்.

11. தாம்பரம் முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு விளங்கனூர் கிராமத்தில் அறிவிப்பு எவ்வாறு பெறப்பட்டது என்றால் தெரியவில்லை. பு.த.சா.ஆ.4 அனுப்பிய முகவரிக்கு திருப்பப்பட்டதாக விவரம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. புகாரில் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதாக பொய்யான விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக தவறான விவரங்கள் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அவ்வாறு பெற்றிருந்தால் ஒப்புதல் கடிதம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கடன் கொடுக்கும் போது 3 1/2 ஏக்கர் சொத்து இருந்தது அது 3 கோடி மதிப்பு இருக்கும். அந்த சொத்து நான் அவரிடம் வாங்கிய வீட்டிற்கு பின்புறம் உள்ளது. அந்த சொத்து எதிரியின் பெயரில் இருக்கிறதா என்றால் இருக்கிறது.

12. வீட்டிற்கு எதிரே 32 ஏக்கர் எதிரிக்கு இருக்கிறது அதன் மதிப்பு 15 கோடி இருக்கும். மேற்படி சொத்துகள் எதிரியின் பெயரில் இருப்பதற்கான ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரிக்கு எந்த சொத்துகளும் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சொத்துகள் இருந்தால் எதிரி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக கடன் கொடுக்கும் நபர் கடன் வாங்குபவரிடமிருந்து கடன் தொகைகு ஈடான ஆவணத்தை வாங்கிகொள்வார்கள் என்றால் சரிதான். நான் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் நானும் அதே போன்று ஆவணத்தை வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது சொத்து மதிப்பு ரூபாய் 40 லட்சம் என்றால் சரிதான். ரூபாய் 20 லட்சம் எனக்கு கடன் இருக்கிறது என்றால் சரிதான்.

13 மேலும் தொழில் கடனாக ரூபாய் 8 லட்சம் வங்கியில் கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரியிடம் வாங்கிய வீட்டின் மதிப்பை சேர்த்து தான் எனது சொத்து மதிப்பு ரூபாய் 40 லட்சம் என்றால் அதை தவிர்த்து தான் ரூபாய் 40 லட்சம். ஏற்கனவே வழக்கு எண் 79/2023 என்னுடைய அசையும் மற்றும் அசையா சொத்து மதிப்பு ரூபாய் 40 லட்சம் என்று சொல்லியிருக்கிறேன் அதில் வீட்டின் மதிப்பு சேர்த்து சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருகிறேன் என்றால் சரியல்ல. ரூ28 லட்சம் கடன் போக ரூ.12 லட்சம் சொத்து

மதிப்பு உள்ள நிலையில் 90 லட்சம் கடன் கொடுக்க எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் நான் கடனாக வாங்கி கொடுத்தேன்.

14. நான் அளித்த வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் முதன்மை வாக்குமூலத்திலும் எந்த எந்த தேதியில் யார் யாரிடம் எவ்வளவு ரூபாய் கடனாக வாங்கி எதிரிக்கு நான் ரூ.90 லட்சம் கடனாக கொடுத்தேன் என்ற விவரம் கூறவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 73/2023 என்ற வழக்கில் சொத்தை சுவாதீனம் பெறுவதற்காக வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 02-05-2022 ம் தேதி சொத்தை வாங்கினேன். எதிரிக்கும் எனக்கும் சொத்து சம்மந்தமாக எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் எதிரி தரப்பில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தினத்திற்கு முன் தினத்தில் பிரச்சனை ஏற்பட்டது. எதிரிக்கு பணம் கொடுப்பதற்காக யார் யாரிடம் கடன் வாங்கினேன் என்று சொல்லமுடியுமா என்றால் 01-01-2023 முதல் 09-01-2023 ம் தேதி வரை 7 நபர்களிடம் கடன் வாங்கினேன். நல்லாமூர் நந்தகுமார் ரெட்டியாரிடம் ரூபாய் 30 லட்சம் வாங்கினேன். சாமந்திபுரம் தட்சிணாமூர்த்தியிடமிருந்து ரூபாய் 10 லட்சம் வாங்கினேன். எனது அப்பா தனசேகரிடமிருந்து ரூபாய் 10 லட்சம் வாங்கினேன். எனது தம்பி பெருமாளிடமிருந்து ரூபாய் 20 லட்சம் வாங்கினேன்.

15. செய்யூர் மளிகை கடை விஜயிடமிருந்து ரூபாய் 10 லட்சம் வாங்கினேன். நெற்றம்பாக்கம் சுகுமார் ரெட்டியாரிடமிருந்து ரூபாய் 5 லட்சம் வாங்கினேன். கீழ்க்கரனை ரூபன் ரெட்டியாரிடமிருந்து ரூபாய் 5 லட்சம் வாங்கினேன். மேற்படி தொகைகளை எனது அப்பா தம்பியை தவிர மற்றவரிகளிடமிருந்து வட்டிக்காக வாங்கினேன். நந்தகுமாரிடம் 1 ரூபாய் வட்டிக்கும் மற்றவர்களிடமிருந்து 1.5 பைசா வட்டிக்கும் வாங்கினேன். கடன் வாங்கிய நபர்களிடம் ஆவணம் எழுதி கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை காசோலை கொடுத்திருக்கிறேன். யார் யாருக்கு என்ன காசோலை எண் கொடுத்தேன் என்று சொல்லமுடியுமா என்றால் காசோலை எண் ஞாபகமில்லை இந்தியன் வங்கி காசோலை கொடுத்திருக்கிறேன்.

16. அவர்களிடம் மூன்று மாதத்திற்கு பணம் கொடுப்பதாக கடன் வாங்கினேனா என்றால் இல்லை தேவைப்படும் போது கொடுப்பதாக கூறி வாங்கியிருந்தேன். அவர்கள் எனக்கு வங்கி மூலம் பணம் கொடுத்தார்களா என்றால் ரொக்க பணமாக கொடுத்தார்கள். புகாரில் மேற்படி நபர்களிடமிருந்து கடனாக வாங்கி எதிரிக்கு கொடுத்ததாக விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். கடன் கொடுத்தவர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் யாரிடமும் கடன் வாங்கவில்லை என்றாலும் எதிரிக்கு நான் கடன் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி எந்த இடத்தில் மாட்டு பண்ணை வைத்திருக்கிறார் என்று பார்த்திருக்கிறேனா என்றால் எதிரிடம் நான் வாங்கிய வீட்டிற்கு பின்னால் மாட்டுப்பண்ணை வைத்திருந்தார்.

17.தாம்பரத்திலும் மாட்டு பண்ணை வைத்திருப்பதாக எதிரியின் ஓட்டுனர் என்னிடம் சொன்னார். எதிரியின் ஒட்டுனர் பார்த்திபன் மற்றும் சுதாகர் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் சொன்னதின் பேரில் கடன் கொடுத்தேனா என்றால் பால் ஏற்றிச்செல்வதை நான் பார்த்திருக்கிறேன். எதிரியின் வியாபார வருமானம் பற்றி தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. உண்மையில் நான் கடன் கொடுத்திருந்தால் எதிரியின் வருமானத்தின் விவரம் தெரிந்து கொண்டு கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு சொத்து இருக்கிறது அதை விற்று தருவதாக சொன்னார். விற்கவில்லை என்றால் எனக்கே விற்பனை செய்வதாக கூறினார். அந்த சொத்துகளில் ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேன். அவை

எதிரியின் பெயரில் தான் இருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு அவற்றை அவர்களின் உறவினர்களுக்கு விற்பனை செய்திருக்கிறார்.

18. சொத்தை குறிப்பிட்டு தான் கடன் கொடுத்தேன் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் என்னிடம் ஆவணம் இல்லாததால் சொல்லவில்லை. 2022 வரை விலங்கனூர் முகவரியில் எதிரி வசித்து வந்தார் அதன் பிறகு எந்த முகவரியில் வசித்து வந்தார் என்று எனக்கு தெரியாது. முகவரி தெரியாத நபருக்கு ரூபாய் 90 லட்சம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூபாய் 738870 தரவேண்டும் என்று எனக்கு அறிவிப்பு எதிரி தரப்பில் தரப்பட்டது என்றால் அறிவிப்பு அனுப்பப்பட்டது எவ்வளவு தொகை என்று ஞாபகமில்லை. எதிரி அனுப்பிய அறிவிப்பு என்னிடம் இருக்கிறது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

19. அந்த அறிவிப்பு தொகையை எதிரிக்கு கொடுக்க தவிர்க்கவேண்டி நான் சுவாதீனம் பெற்ற எதிரியின் வீட்டில் இருந்த எதிரியின் காசோலையை எடுத்து தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் அவர் தான் பூர்த்தி செய்திருந்தார். வழக்கு காசோலையை வங்கியில் போடுவதற்கு முன்பு எதிரியிடம் சொன்னேனா என்றால் இல்லை. புகாரில் உள்ள விவரங்கள் தற்போது சாட்சியம் அளிக்கும் விவரங்கள் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் தாம்பர முகவரிக்கு இந்த வழக்கின் அழைப்பாணை அனுப்பப்பட்டு திரும்பியுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு வேறு முகவரிக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றால் அது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

20. நீதிமன்றத்தில் என்னுடைய வங்கி கணக்கறிக்கை மற்றும் வருமான வரி கணக்கு அறிக்கை ஆகியவற்றை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். அதை பார்த்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் வட்டிக்கு வாங்கிய விவரம் அதில் இல்லை. நான் எதிரிக்கு கொடுத்த ரூபாய் 90 லட்ச கடன் விவரம் அதில் இல்லை. உண்மையில் நான் கடன் கொடுத்திருந்தால் நான் என்னுடைய கணக்கில் காண்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கொடுக்கவில்லை என்பதால் தான் வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சொத்து வாங்குவதற்கு முன்பு கிரய உடன்படிக்கை எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்கு கிரய உடன்படிக்கை எழுதப்பட்டது என்றால் 29 லிருந்து 31.50 லட்சம் வரை இருக்கும்.

21. கிரயம் வாங்குவதற்காக கிரய உடன்படிக்கை தேவை என்பதால் போட்டேன். பணம் கொடுக்கல் வாங்குதலுக்கு ஆதாரமாக கிரய உடன்படிக்கை போடப்பட்டுள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவண எண் 1599/2022 செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 02-05-2022 ம் தேதி நான் கிரயம் வாங்கிய ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். (அந்த ஆவணம் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த கிரய ஆவணத்தின் கிரைய உடன்படிக்கை ஆவணம் குறித்த விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 31.5 லட்சம் ரூபாயிக்கு கிரைய உடன்படிக்கை எழுதும் போது ரூபாய் 90 லட்சம் கடனுக்கு கடன்பத்திரம் எழுதியிருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் கடன் கொடுத்திருந்தால் கடன் பத்திரம் எழுதியிருப்பேன் என்றால் சரியல்ல.

22. எதிரி தரப்பில் எனக்கு அனுப்பியிருந்த வழக்கறிஞர் அறிவிப்பிக்கு எனது வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும்

பதில் அறிவிப்பின் நகல் எனது வழக்கறிஞர் எனது சார்பாக அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பு வழக்கு எண் 79/2023 எ.த.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். (அந்த 02-02-2023 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு நகல் எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் வழக்கு எண் 79/2023 ல் சாட்சியம் அளித்துள்ள குறுக்கு விசாரணை சாட்சியம் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். (அந்த குறுக்கு விசாரணை சாட்சியத்தின் சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). புகார்தாரர் தரப்பில் வழக்கு எண் 79/2023 ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது.